# மதுரை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கழகத்தினர் திரண்டனர்!



மதுரையில் நடைபெற உள்ள கழக மாநில பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க விமான மூலம் வருகை தந்த கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வரவேற்றார். உடன் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவை கள் துறை அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் உள்ளிட்டோர் உள்ளனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (31.5.2025) மதுரை விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (31.5.2025) மதுரை விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (31.5.2025) மதுரை விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (31.5.2025) வில்லாபுரம் மற்றும் ஜெய்ஹிந்த்புரத்தில் வழிநெடுகிலும் பெருந்திரளான பொதுமக்கள் பல்வேறு அமைப்பினர், மாணவ–மாணவிகள் மற்றும் கழகத்தினர் பல்லாயிரக்கணக்கில் கழகக் கொடியுடன் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.5.2025) மதுரை, ஜெய்ஹிந்த்புரம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோவிலின் நிரந்தர நிழற்கூரையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், மு. மணிமாறன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (31.5.2025) சென்னை, வால்டாக்ஸ் சாலை. தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் 700 புதிய குடியிருப்புகள் பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சி.எம்.டி.ஏ. கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, மாநகராட்சி மண்டல அலுவலர் டாக்டர் பரிதா பானு, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.